**கவனிக்க.-** *2015.09.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1935 - 2015 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2015.10.02

*1935 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1500 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1505 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, கார்த்திகை மாதம் 02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, புரட்டாதி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே | கொழும்பு பிரிவின் நுகேகொட பிரதேசத்தின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 5 |

10-117

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மொனராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, செத்தெம்பர் 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொனராகலை | பிபில | நில்கலை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் பிபில (கண்டிய/பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மொனராகலை |

10-214

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, செத்தெம்பர் 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலியும் நாற்புறமும் | காலியும் நாற்புறமும் பிரதேச செயலாளர் பிரிவில் விவாக (பொது) பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

10-33

---

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

கண்டி மாவட்டம்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தினை திருத்தஞ் செய்தல்.

2015.07.30 ஆந் திகதிய, 1926 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தை 2015.10.24 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

2. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற்கொள்ளவும்.

பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பன்வில | பன்வில பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பன்வில பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பாததும்பர | உடபகம்பஹா கிழக்கு மற்றும் மேற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பாததும்பர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

10-34

## அரசாங்க தகவல் திணைக்களம்

நிறைவேற்று சேவை தரத்திலான தயாரிப்பாளர் (திணைக்களத்தினூடானது) பதவியில் இணைத்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை தரத்திலான தயாரிப்பாளர் (திணைக்களத்தினூடானது) பதவிக்காக இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பொருந்தியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தெரிவுசெய்யப்படும் முறை.**- சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுள் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவின் மூலம் முன்னெடுக்கப்படும் வாய்மொழி மூல நேர்முகத் தேர்வின் முடிவுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கு வெற்றிடங்களின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படும். அங்கு அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கல் திட்டத்தின் கீழ் வாய்மொழி மூல நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

2. **தகைமைகள் :**

(அ) தொழில் தகைமைகள்.- அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 1 ஆம் தர பதவியில் சேவையில் ஈடுபடல்.

(ஆ) அனுபவம்.- அரசாங்க திரைப்படப் பிரிவில் ஒளிப்பதிவு, சீராக்கல் (Editing), ஆய்வுகூட நடவடிக்கைகள், ஒலியியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஏதும் ஒன்றில் குறைந்தது 5 வருடங்கள் சேவைகளில் அனுபவம் இருக்க வேண்டும்.

(இ) உடற்தகைமைகள்.- நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவை புரிவதற்கான உடல், உள ஆரோக்கியமுள்ளவராக இருக்க வேண்டும்.

(ஈ) வேறு :

(1) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
(2) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
(3) குறித்த தினத்தில் 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் ;
(4) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது குறித்த பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(1) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உண்டு. ஓய்வூதிய திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டும்.

(2) நியமனம் ஒரு வருட காலம் பதில் அடிப்படையில் கொள்ளப்படும். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை மட்டம் III ஆம் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 3 வருடத்துக்குள் இணைத்துக்கொள்ளும் விதிமுறைகளின்படி செய்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) பொது நிர்வாக சுற்றறிக்கை 07/2007 ஆம் இலக்கத்துடன் தொடர்புடைய மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கையின்படி பதவிக்குப் பொருத்தமான மட்டத்தில் மொழி ரீதியான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சேவைக் கோவையின் சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதிச் சட்டங்களுக்கும், திணைக்களத்தின் மற்றைய கட்டளைகளுக்கும் இப்பதவி உள்ளடக்கப்படுகின்றது.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரி விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என்பதோடு அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு குறித்த வயது கட்டுப்பாடு இல்லை.

**குறிப்பு :**

(1) மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4 ஆவது பிரிவின்கீழ் அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் என்பது (தாபனவிதிக் கோவையில் I ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்று) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது நிரந்தர பதவி வகிக்கும் அரச சேவை உத்தியோகத்தர்கள் அல்லது மாகாண அரச சேவை உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.

(2) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது ஐந்து வருடங்களுக்கு கிட்டிய சேவைக்காலத்திலோ அல்லது சேவையில் ஈடுபட்ட காலம் அதற்கும் குறைவாக இருந்தால் முழுமையான சேவைக்காலத்திலோ திருப்திகரமான நற்சான்றிதழ் ஒன்று இல்லையென்றால் அரச சேவையில் பதவி வகிக்கும் எந்தவொரு உத்தியோகத்தர்களுக்கும் இவ்வெற்றிடத்துக்காக விண்ணப்பிக்க முடியாது.

(3) அரச சேவை உத்தியோகத்தர்கள், திருப்திகரமான நற்சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொண்டுள்ளார் என்பது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னரான ஐந்து வருடத்துக்குள் அல்லது குறித்த நிறுவனத்தின் முழு சேவைக்காலம் ஐந்து வருடங்களுக்குக் குறைவாக இருந்தால் முழு சேவைக்காலத்திலும் எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் குற்றம் பிடித்து தண்டனை வழங்கப்படாதவராக இருக்க வேண்டும்.

(4) அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர் ஒருவர் தமது விண்ணப்பப்படிவத்தைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

5. **சம்பளம்.**- இச்சேவை, பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06/2006 ஆம் இலக்க எஸ்எல்-1-2006 கோவைக்குப் பொருந்துகின்றது. அச்சம்பளக் கோவையின் சம்பளத் திட்டம் பின்வருமாறு-

ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூ. 53,555 (மாதாந்தம்).

6. **நேர்முகப் பரீட்சை :**

(1) அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவின் நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

(2) நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் முறை :

| தகைமைகள் | புள்ளிகள் |
|---|---|
| 1. மேலதிக அனுபவங்கள் | 30 |
| 2. மேலதிக தொழில் தகைமைகள் | 30 |
| 3. விசேட தகைமைகள் | 35 |
| 4. நேர்முகத் தேர்வின்போது காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

7. **விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- முழுமையான தகைமைகளைக் கொண்டவரே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகத் தேர்வின்போது முன்வைக்கப்படும் அனைத்துச் சான்றிதழ்களினதும் போட்டோப் பிரதியொன்று உறுதிப்படுத்தப்பட்டு முன்வைக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வின்போது தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்துகொள்வதற்காக பின்வரும் ஆவணங்களை ஒப்படைக்கலாம் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

(1) விண்ணப்பப்படிவங்கள் 2015.10.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக "செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு, 'எசிதிசி மெதுர', இலக்கம் 163, கிருலப்பனை ஒழுங்கை, கொழும்பு 05" எனும் விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரிகள் அவர்களது விண்ணப்பப்படிவங்களை ஏ4 வடிவத் தாளில் தயாரித்து, அதன் முதல் பக்கத்தில் இலக்கம் 1 முதல் 4 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 5 முதல் 8 வரையும் அடங்குமாறு தயாரித்து உமது சுய கையெழுத்தில் நிரப்பி அனுப்பவும்.

(3) தபால் உறையின் மேல் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவைத் தரத்திலான தயாரிப்பாளர் (திணைக்களத்தினூடானது) பதவிக்காக இணைத்துக்கொள்ளல்" எனும் அடிப்படையில் குறிப்பிடப்பட வேண்டும்.

(4) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

(5) இம்மாதிரி விண்ணப்பப்படிவத்துக்குப் புறம்பான முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல், தாமதமடைதல் என்பவை தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **உண்மையான தகவல்களை வழங்குதல்**.- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பங்களில் காணப்படும் ஏதாவது ஒரு தகவல் பொய்யானது அல்லது பிழையானதென இணைத்துக்கொள்வதற்கு முன்னர் நிரூபணமானால், உமது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ்வாறான தகவல்கள் இணைத்துக்கொண்ட பிறகு நிரூபணமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இவ்வறிவித்தலில் இல்லாத ஒரு அம்சமாக இருந்தால் அது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் பொறுப்பு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது. அதேபோன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடல், ஒரு பகுதியை நிரப்புதல் போன்றவை தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது.

11. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி தொடர்பில் ஏதும் பிரச்சினைகள் எழும் பட்சத்தில் இறுதியில் சிங்கள மொழி மூல அறிவித்தலே ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். டீ. ஏ. பி. பொரலெஸ்ஸ,
செயலாளர்,
வெகுசன ஊடக அமைச்சு.

வெகுசன ஊடக அமைச்சு,
"எசிதிசி மெதுர",
இலக்கம் 163, கிருலப்பனை ஒழுங்கை,
கொழும்பு 5.
2015, ஒகத்து 7.

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தகவல் திணைக்களம்**

நிறைவேற்று சேவை தரத்திலான தயாரிப்பாளர்
(திணைக்களத்தினூடானது) பதவியில் இணைத்துக்கொள்ளல்

1. தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 01
தமிழ் - 02
ஆங்கிலம் - 03
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2. தனிப்பட்ட விபரங்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) : Mr./Mrs/ Miss :----.
உ+ம் : Mr./Mrs/ Miss SILVA A.B

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.5 பால் :
ஆண் - 1
பெண் - 2
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2.6 விவாகமானவரா ?/விவாகமாகாதவரா ? :
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2

2.7 இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, ஏனையோர்-5)
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.9 பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----.

2.10 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. **அனுபவம்** :

3.1 பதவியில் இணைந்து கொண்ட திகதி :----.

3.2 விண்ணப்பிக்கும்போது முழு சேவைக்காலம் :----.

4. தொழில்சார் தகைமைகள் :

4.1 முதல் தரத்துக்கு உயர்த்தப்பட்ட திகதி :----.

4.2 விண்ணப்பிக்கும்போது முதல் தரத்தில் வகித்த முழுச் சேவைக்காலம் :----.

4.3 விசேட தரத்துக்கு உயர்த்தப்பட்ட திகதி :----.

4.4 விண்ணப்பிக்கும்போது விசேட தரத்தில் வகித்த முழுச் சேவைக்காலம் :----.

5. வேறு தொழில் தகைமைகள்.- (அரசாங்க திரைப்படப் பிரிவில் ஒளிப்பதிவு, சீராக்கல் (Editing), ஆய்வுகூட நடவடிக்கைகள், ஒலியியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பெற்றுள்ள தகைமைகளை இங்கு குறிப்பிடவும்.) :----.

6. விசேட திறமைகள்.- (பெற்றுக்கொண்டுள்ள விசேட திறமைகள் தொடர்பில் இங்கு குறிப்பிடவும்.)

7. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் பிழையற்றவை எனவும் உறுதி மொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. திணைக்களத் தலைவரின் உறுதியுரை :
அரசாங்க தகவல் திணைக்களத்தின் தயாரிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள ..................... அமைச்சின்/திணைக்களத்தில் சேவை புரியும் மேலே கைச்சாத்திட்டுள்ள ..................................... ஐயா/அம்மணி/செல்வி தற்போது ................................. பதவியில் சேவை புரிவதாகவும், குறித்த நபரின் சேவை மற்றும் குணநலன்கள் திருப்தியளிப்பதாகவும் இதன் மூலம் சான்று பகர்வதுடன், குறித்த விண்ணப்பப்படிவத்தை அங்கீகரிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
அலுவலக முத்திரை :----.

10-151

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III ஐச் சேர்ந்த பதவிகளில் 29 வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால், அதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயரானது, சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி : 2015.11.02 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற்போதல் அல்லது தாமதம் ஆகியன தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்பினை பரீட்சார்த்திகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை** :

(i) எழுத்துமூலப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

போட்டிப் பரீட்சையினூடாக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்திசெய்யும் வகையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் வரிசைக் கிரமம் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

நியமனத் திகதி மற்றும் நியமனங்களின் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும்.

(ii) தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் 3% வீதம் அங்கவீன விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் சித்தியடையும் விசேட தேவையுள்ள நபர்களுள் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் வரிசைக் கிரமப்படி இந்நியமனம் வழங்கப்படும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி நிபுணத்துவ வைத்திய பரிசோதனைச் சபைக்கு அனுப்பப்பட்டு, நிபுணத்துவ வைத்திய அறிக்கை ஒன்றின் மூலம் தமது அங்கவீன நிலை, குறித்த பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக அமையாது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**2. சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (3) ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், மேற்படி மூன்று (3) ஆண்டு காலத்தினுள் முதலாவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iii) அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள், குறித்த அரச கரும மொழியில் தகுதிகாண் காலப்பகுதிக்குள் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், அடுத்த அரச கரும மொழி தொடர்பாக பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கு அமைய குறித்த தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை களுக்கும், சேவைப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

**3. சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு, பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைய எஸ்எல்-1-2006, ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 ரூபா (மாதாந்தம்) ஆன சம்பளத் திட்டம் உரித்துடையதாகும்.

**4. கல்வித் தகைமைகள் :**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ கணினி பொறியியல் விஞ்ஞானம் அல்லது கணினி தொழில்நுட்பம் ஆகியனவற்றில் ஏதாவதொரு பட்டத்தைப் பெற்றித்தல் வேண்டும்.) ;

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்லைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அதில் பட்ட கற்கைநெறி முழுவதிலும் ஆகக்குறைந்தது 1/ 3 பகுதி கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்லைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.) ;

அல்லது

(3) (i) மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக ஆகக்குறைந்தது தேசிய தொழிற்தகைமை (NVQ) ஏழாம் (7) மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) குறித்த துறையில் இரண்டு ஆண்டுகால (2) தொழில் சார் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இங்கு 4 (3) (ii) மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களின் மூலப்பிரதி களை நேர்முகப் பரீட்சையின்போது முன்னளித்தல் வேண்டும்.

தனியார் துறையில் ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது பெற்றுக்கொண்ட தொழில்சார் அனுபவம், நிறுவகத்தின் பதிவு இலக்கம், விண்ணப்பதாரியின் ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் ஆகியன உள்ளடங்கலான கடிதம் மற்றும் குறித்த நியமனக் கடிதம் ஆகியனவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

அரச துறையில் சேவையாற்றி தொழில்சார் அனுபவம் பெற்றி ருப்பின், குறித்த திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் மூலமும், கடமைப் பட்டியல் மூலமும் அதுபற்றி உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

**5. வயதெல்லை**.- ஆகக்குறைந்த வயதெல்லை 21 ஆகும். ஆகக்கூடிய வயதெல்லை 35 ஆகும்.

(அதற்கமைய வயதெல்லை தொடர்பான தகைமை பெறுவது, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1994.11.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1980.11.02 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராயின் மாத்திரம் ஆகும்.)

**6. தேகாரோக்கியம் :**

(i) எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும்,

(ii) பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய போதிய உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**7. பிற தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ii) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் ;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**8. பரீட்சை செயற்பாட்டு முறை :**

8.1 எழுத்துமூலப் பரீட்சை :

8.1.1 இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் :

| விடயம் | காலம் | அதிகூடிய புள்ளிகள் | சித்தி பெறும் புள்ளிகள் |
|---|---|---|---|
| பொது விவேகம் | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| தகவல், தொடர் பாடல் தொழில் நுட்பம் தொடர் பான கிரகித்தல் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| தகவல், தொடர் பாடல் தொழில் நுட்ப முகாமைத் துவ உளச்சார்பு | 2 மணித்தியாலம் | 100 | 40 |

**குறிப்பு**.- கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக்கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்தபோதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக்குறைந்தது 40% வீதத்தையாவது பெற வேண்டியதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தையாவது பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஆகியனவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்திசெய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

8.1.2 பாடவிதானம் :

| வினாத் தாளின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| பொது விவேகம் | எண் ரீதியான, மொழி ரீதியான மற்றும் உருவ ரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் இடைத் தொடர்புகள் என்பவற்றுடன் தொடர்புபட்டதாக முன்வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்க விவேகம், பொருள்கோடல் திறன் என்பவற்றை ஏனையவற்றுடன் தொடர்புபடுத்தும் ஆற்றல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்களை உள்ளடக்கியதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| தகவல், தொடர் பாடல் தொழில் நுட்பம் தொடர் பான கிரகித்தல் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவம்சார் கருதுகோள் திறன், தகவல் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளத்தக்க திறன், தகவல் தொழில்நுட்ப செயற்திட்ட முகாமைத்துவத் திறன் மற்றும் தரப்படும் தலைப்புக்கள்/தொனிப் பொருள் ஆகியன தொடர்பான முறைமைப் பகுப்பாய்வு, திட்டமிடல் மற்றும் மென்பொருள் முறைமைகள் மற்றும் அவற்றின் விருத்தி தொடர்பாக பரீட்சார்த்தியின் திறன் இங்கு பரீட்சிக்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கிய தாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| தகவல், தொடர் பாடல் தொழில் நுட்ப முகா மைத் துவ உளச் சார்பு | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப புதிய தோற்று முகங்களுடன் வன்பொருள் விருத்தி, இயங்குதளம் மற்றும் பேணல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் உளச்சார்பினை அளவீடு செய்யுமுகமாக இப்பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாத்தாள் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கிய தாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

8.2 நேர்முகப் பரீட்சை :

8.2.1 சாதாரண நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).- எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்.- சேவைப்பிரமாணக் குறிப்புக்கு அமைய வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றி பரிசீலித்தல்.

**9. பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஏதாவதொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அத்துடன் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாத் தாள்களிலும் உள்ள வினாக்களுக்கு ஒரு மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் தத்தமது விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. எல்லாப் பரீட்சார்த்திகளும் மூன்று வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணத்தைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்து எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணபத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(iii) பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

(iv) இப்பரீட்சை 2016, சனவரி மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

(v) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முன்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும்.

பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதனை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஆதாரமாகக் கருதக்கூடாது.

(vi) விண்ணப்பப்படிவம் 22-29 செ. மீ. அளவுடைய ஏ4 தாள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். 1 தொடக்கம் 3 வரையிலான தலைப்புக்கள் விண்ணப்பத்தின் முதலாம் பக்கத்திலும் 4 இலிருந்து தொடர்ந்து வரும் பந்திகள் ஏனைய பக்கங்களில் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்குரிய தகவல்களை மிகத் தெளிவாகத் தமது கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும், முழுமையற்ற விண்ணப்பங்களும் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

(vii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் உடனடியாகவே அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தம்மிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினதும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதிகளையும், கொழும்புக்கு வெளிப் பிரதேசம் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபெக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்படி, பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ்வொழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி ஏற்படும்.

(x) *விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்*.- பரீட்சார்த்திகள்ம பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பத்துடன் எதுவித கடிதமோ அல்லது அதன் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(ஆ) கோரப்படும் எச்சந்தர்ப்பத்திலும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

வெளிவாரி பரீட்சார்த்திகளின் விண்ணப்பப் பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய எவரேனும் ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(xi) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்களைக் கொண்ட பெறுபேற்றுப் பட்டியல், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும்.

*பெறுபேறுகளை வெளியிடல்*.- எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40% வீதத்திற்குக் குறையாமலும் மற்றும் முழு மொத்த பரீட்சையினதும் புள்ளிகளின் எண்ணிக்கையின் 50% அல்லது அதற்கு

அதிகமாகவும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடங்கிய பெறுபேற்றுப் பட்டியல் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதும், www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்.

பொது நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு,
2015, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

***Open Competitive Examination for Recruitment to Class I - III of Sri Lanka Information & Communication Technology Service - 2015***

(தரப்பட்டுள்ள கூட்டினுள் பொருத்தமான குறியீட்டை/இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்.)

(அலுவலகப் பயன்பாட்டுக்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

* தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வர்த்தமானி அறிவித்தலின் 1 (ii) ஆம் பந்தியின் பிரகாரம், புனர்வாழ்வளிப்பு நிபந்தனைக் குட்பட்டா ?
(இப்பகுதியை வாசிப்பதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் 1 (ii) ஆம் பந்தியை நன்றாக வாசிக்கவும்.)

ஆம் - 1
இல்லை - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
GUNAWARDHANA H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் :
(ஆண்/பெண்)
பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

3.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :

4. கல்வித் தகைமை :

4.1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் ஏதேனும் இருப்பின்-
(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் :----.
(iii) பரீட்சை ஆண்டு :----.
(iv) பிரதான பாடங்கள் :

1.
2.
3.
4.

4.2 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் ஏதேனும் இருப்பின்,
(i) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(ii) பட்டப்பின் பட்டத்தின், பட்டப்பின் பட்ட டிப்ளோமாவின் பெயர் :----.
(iii) பரீட்சை ஆண்டு :----.

4.3 தேசிய தொழிற் தகைமை (NVQ) ஏழாம் (7) மட்டம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் தகைமை இருப்பின்,-

(i) பாடநெறியின் பெயர் :----.
(ii) பாடநெறியைப் பயின்ற நிறுவனம் :----.
(iii) ஆண்டு :----.
(iv) பாடநெறிக்காலம் (மணித்தியாலங்களில்) :----.

5. தொழில்சார் அனுபவம் மற்றும் வேறு தகைமைகள் :

5.1 தொழில்சார் அனுபவம் :

| அனுபவம்பெற்ற நிறுவகம் | காலம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.2 பிற தகைமைகள் : ----------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டினைக் கழராதவாறு இவ்விடத்தில் ஒட்டுக. |
|---|

7. நீர் எப்போதாவது ஏதாயினும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டவரா ? :----.
(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக.), (ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.)

.................................................................... ☐ ஆம் ☐ இல்லை
....................................................................
....................................................................

8. அரசாங்க சேவையின் சேவைக்காலத்தில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டுள்ளீரா ? :----.
(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக.), (ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.)

.................................................................... ☐ ஆம் ☐ இல்லை
....................................................................
....................................................................

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் கௌரவத்துடன் வெளிப்படுத்து கின்றேன். இதில் ஏதாயினும் ஒரு பகுதியை நிரப்பாது விடுவதனால் மற்றும்/ அல்லது தவறான முறையில் நிரப்புவதனால் ஏற்படக்கூடிய பாதகங்களை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும் இதிலுள்ள அனைத்துப் பகுதிகளையும் உரிய முறையில் பூர்த்திசெய்துள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இவ்வெளிப்படுத்துகை பொய் யானது என்று நிரூபிக்கப்படுமிடத்து, நியமனம் வழங்கப்பட முன்னராயின் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதை யும் நியமனம் கிடைத்ததன் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்து கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் என் முன்னிலையில் ............................... ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும், மேலும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும், அதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துக.)
திகதி :----.

11. நிறுவகத் தலைவரின் சான்றுரை : (அரசாங்க/மாகாண அரசாங்க/ அரச சார்பற்ற கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவர் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவகத்தில் ......................................... ஆக சேவையாற்றுவதுடன், அவரது விண்ணப்பத்தைச் சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், இந்நிறுவகத்திலிருந்து விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கை களை மேற்கொள்ள முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துக.)
திகதி :----.

## அரசாங்க சேவை ஆணைக்குழு

சட்டவரைஞர் திணைக்களம்

**சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்டவரைஞர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2013 (2015)**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி, சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்டவரைஞர் பதவியிலான 4 வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஆட்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காகத் தகைமைபெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு'' என்னும் முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். ''சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்ட வரைஞர் பதவிக்கான போட்டிப் பரீட்சை - 2013 (2015)'' என்னும் சொற்கள், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான விண்ணப்பங்களில் சிங்கள, தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாகப் பரீட்சையின் பெயரானது ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 2015, நவெம்பர் மாதம் 2 ஆந் திகதியாகும்.

**குறிப்பு.**- விண்ணப்பங்கள் அல்லது தொடர்புபட்ட ஆவணங்கள் அஞ்சலில் தொலைந்து போனமை அல்லது தாமதப்பட்டமை தொடர்பான எவையேனும் சார்த்தப்பட்ட முறைப்பாடுகள் ஏற்றுக் கவனிக்கப்பட மாட்டாது.

1. **ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை :**

* ஒரு போட்டிப் பரீட்சையினதும் கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் மீது ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

* பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப் பட்ட எழுத்துப் பரீட்சையில் அதியுச்சப் புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் திறமை ஒழுங்கு வரிசையின்படி கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

* பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கல் திட்டத்தின் நியதிகளின்படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால் கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்.

* எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையிலும் பெறப்பட்ட கூட்டுமொத்தப் புள்ளிகளின் மீது திறமை ஒழுங்கு வரிசையின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பொருத்தமான பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவர்.

* நியமனங்களின் எண்ணிக்கையும் நியமனங்களின் பயனுறு திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தொழில் நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி, விதவைகள், அநாதைகள்/ விதுரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு உதவு தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) 07/2007 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும் ஏனைய இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளினதும் நியதிகளின்படி ஆட்சேர்க்கப்பட்டதிலிருந்து 5 ஆண்டுகளி னுள் மற்றைய மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாதவொரு மொழியினூடாகச் சேவையில் சேரும் அலுவலர்கள், ஆட்சேர்ப்பிலிருந்து 3 ஆண்டுகளினுள் அரச கரும மொழிகளுள் ஒன்றில் மொழித் தேர்ச்சி பெறுதல் வேண்டுமென்பதுடன், ஆட்சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) ஆண்டுகளினுள் மற்றைய அரச கரும மொழியிலும் தேர்ச்சி பெறுதலும் வேண்டும்.

(iii) இந்நியமனம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைசார் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதிசார் ஒழுங்கு விதிகள் மற்றும் வேறு திணைக்கள ரீதியிலான ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கு அமைந்ததாக இருக்கும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- 06/2006 ஆம் இலக்கப் பொது நிர்வாக சேவைச் சுற்றறிக்கைக்கிணங்க இப்பதவி (மாதமொன்றுக்கு) 28,095 - 5 x 645 - 5 x 790 - 15 x 1,050 - 51,020 ரூபா கொண்ட சம்பள அளவுத்திட்டத்தை (SL-5-2006) கொண்டுள்ளது.

4. **தகைமைகள் :**

4.1 கல்விசார்/உயர் தொழில்சார் தகைமைகள் :

(i) இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி யொருவராக நிரலிற் சேர்க்கப்பட்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில், ஒன்றில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் மற்றும் ஆங்கில மொழியில் விசேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4.2 அனுபவம்.- சட்டத்தரணியாக நிரலிற் சேர்க்கப்பட்ட பின்னர் இரண்டு (2) ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்பான உயர் தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 உடற்றகுதி.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும்-

(i) இலங்கையில் எப்பாகத்திலும் பணி புரிவதற்கு,

(ii) தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயன்றவராகவிருப்பதற்கு, போதிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 ஏனைய தகைமைகள் :

(i) பரீட்சார்த்திகள் இலங்கைப் பிரசைகளாகவிருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் நல்ல ஒழுக்கமுடையவர் களாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலுள்ளவாறு, பரீட்சார்த்திகள் தேவைப்பட்ட எல்லாத் தகைமை களையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) இலங்கைச் சட்டங்களின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டோரல்லாதவராக விருத்தல் வேண்டும்.

4.5 ***வயதெல்லை :***

(i) கீழ் வயதெல்லை - 22 ஆண்டுகள்.
(ii) மேல் வயதெல்லை - 35 ஆண்டுகள்.

5. **பாடவிதானம் :**

5.1 *எழுத்துப் பரீட்சை.-* சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்டவரைஞர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டுள்ளது :

(1) சட்டம் பற்றிய அறிவு - (நேரம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(2) மொழித் தேர்ச்சி - (நேரம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் | சித்திக்கான குறைந்த பட்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. சட்டம் பற்றிய அறிவு | (i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புப் பற்றிய அறிவு<br>(ii) பொருள் கோடல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுட்பட நியதிச் சட்டமுறையான பொருள்கோடல் பற்றிய கோட்பாடுகள்<br>(iii) சட்டத்தின் பொதுக் கோட்பாடுகள் | 40% |
| 2. மொழித் தேர்ச்சி : பாகம் I - சிங்கள/ தமிழ் மொழியி லான அறிவு | பாராளுமன்றச் சட்டமொன்றின் ஒரு பகுதியை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள/தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல்<br><br>ஆங்கில மொழியிலுள்ள சட்டமொன் றின் பிரிவை அதன் பிழையான சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்புடன் ஒப்பிடுதலும் மற்றும் சொல்லப்பட்ட சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்பைத் தகுந்த முறையில் மீளாய்வு செய்த லும் ; அத்துடன் | 40% |
| பாகம் II - ஆங்கில மொழியி லான அறிவு | இலக்கணம் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள்<br><br>சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகளி லிருந்து ஏற்புடையவாறு பரீட்சார்த்தி கள் இரு இயைபான வினாத்தாள் களுக்குத் தோற்றுதல் வேண்டும். | |

ஒவ்வொரு வினாத்தாளிலுமுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

5.2 ***கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சை.-*** பரீட்சைகள் ஆணையாளர் தலைமை அதிபதியினால் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் அதியுச்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து திறமை ஒழுங்கு வரிசையின்படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஐந்து மடங்குகளுக்கு சமமாகவுள்ள எண்ணிக்கையினரான பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கான திகதியைச் செயலாளர் முடிவு செய்வார். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால் புள்ளிகள் வழங்கப்படும்.

6. கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புள்ளி வழங்கல் திட்டம் :

| தொடர் இல. | பாடம் | | அதிக பட்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிகக் கல்வித் தகைமைகள் | | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன் றிலிருந்து பெறப்பட்ட சட்டத்திலான பட்டம் : | | |
| | * முதலாம் வகுப்புக்காக | 15 | |
| | * இரண்டாம் வகுப்பு மேல் நிலைக்காக | 10 | |
| | * இரண்டாம் வகுப்பு கீழ்நிலைக்காக | 08 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் முதலாம் வகுப்புக்காக | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்புக்காக | 08 | |
| | (ஒன்றில் பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமையில் பெறப்பட்ட அதியுச்சத் தகைமைக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 2 | உயர் தொழில்சார் தகைமைகள் | | 10 |
| | இயைபான துறையில் ஓராண்டுக்குக் குறையாத பட்டப்பின் திப்புளோமா வுக்காக அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப் பட்ட, சட்டத்திலான பட்டப்பின் டிப்புளோமாவுக்காக | | |
| | (ஒரு டிப்புளோமாவுக்கு 5 புள்ளிகள்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றி னால் வழங்கப்பட்ட இயைபான துறை யில் 6 மாதங்களுக்குக் குறையாத டிப்புளோமா கற்கைநெறியொன்றுக் காக | | |
| | (ஒரு டிப்புளோமாவுக்கு 3 புள்ளிகள்) | | |

| தொடர் இல. | பாடம் | | அதிக பட்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றி னால் வழங்கப்பட்ட இயைபான துறை யில் 3 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் கற்கைநெறிக்காக<br><br>(ஒரு கற்கைநெறிக்கு 2 புள்ளிகள்) | | |
| 3 | சட்டத்தரணியொருவராகப் பெறப்பட்ட மேலதிக அனுபவம்<br><br>தகைமையொன்றாகத் தேவைப்படுத்தப் பட்ட, சட்டத்தரணியொருவராக 2 ஆண்டுச் சேவைக்காலப்பகுதி நீங்க லாக, பதவிக்காக விண்ணப்பிப்பதற் குத் தகவுடையவராகவிருப்பதற்கு, அதிகபட்சம் 10 புள்ளிகளுக்கு அமை வாக, பகிரங்க சேவையில் அல்லது தனியார் துறையில் சட்டத்தரணி யொருவராகப் பெற்ற அனுபவத்தின் ஒவ்வோராண்டுக்கும் 2 புள்ளிகள்<br><br>(20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவை யைப் பூர்த்திசெய்துள்ள சட்டத்தரணி யொருவரினால் அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரினால் அல்லது நீதிபதியொருவரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவம் நிலைநாட்டப்படுதல் வேண்டும்.) | | 10 |
| 4 | ஆங்கில மொழித் தேர்ச்சி<br><br>பட்டப்பின் பட்டம்/பட்டம்/சட்டத்திலான பட்டப்பின் பட்டம்/சட்டத்திலான பட்டம் என்பன ஆங்கில மொழி மூலம் கற்கப் பட்டிருத்தல்<br><br>(இயைபான எல்லா வினாத்தாள் களுக்கும் ஆங்கில மொழி மூலம் விடை யளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத்தில் அல்லது அரசாங் கத்தினால் அங்கிகரிக்கப்பட்டவொரு நிறுவனத்தில் ஆங்கில மொழி டிப்புளோமாவுக்காக (1,500 மணித்தியாலங்கள்.)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வொரு நிறுவனத்தில் ஆங்கில மொழிச் சான்றிதழ் கற்கைநெறிக்காக<br><br>(720 மணித்தியாலங்கள் - 1500 மணித்தியாலங்கள்) | 5<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>2 | |
| 5 | சிங்கள/தமிழ் மொழித் தேர்ச்சி<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தமிழ்/சிங்கள மொழியிலான திப்புளோமா கற்கை நெறிக்காக (1 ஆண்டுக்குக் குறையாமல்)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தமிழ்/சிங்கள மொழியிலான சான்றிதழ் கற்கை நெறிக்காக<br><br>6 மாதங்களுக்கு மேற்படவும் ஓர் ஆண்டுக்குக் குறையாமலும் (720 மணித்தியாலங்கள் - 1,500 மணித்தியாலங்கள்)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தமிழ்/சிங்கள மொழியிலான சான்றிதழ் கற்கை நெறிக்காக<br><br>3 மாதங்களுக்கு மேற்பட்டதும் 6 மாதங் களுக்குக் குறையாததுமான காலம் (360 மணித்தியாலங்கள் - 720 மணித் தியாலங்கள்) | <br><br>5<br><br><br><br><br><br><br>3<br><br><br><br><br><br><br><br><br>2 | 5 |
| 6 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப் பட்ட திறன்கள் | | 5 |
| | மொத்தம் | | 50 |

**7. பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சையானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின் எல்லா வினாத் தாள்களுக்கும் பரீட்சார்த்திகள் ஒரு மொழியில் மட்டுமே விடைதருதல் வேண்டும். விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை மாற்றுவதற்குப் பரீட்சார்த்தி யொருவருக்கு அனுமதியளிக்கப்படுதலாகாது. பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் இரு வினாத்தாள்களுக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணங்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்னும் அரசிறைத் தலைப்புக்கு வரவு வைக்கப்படுவதனை இயலச் செய்யும் வகையில் அத்தகைய கட்டணம் ஏதேனும் பிரதேசச் செயலகத்துக்கு அல்லது மாவட்டச் செயலகத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பற்றுச்சீட்டானது கழராதவாறு விண்ணப்பத்தில் இயைபான கூட்டில் உறுதியாக ஒட்டப்படுதலும் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை விண்ணப்பகாரர் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

(iii) பரீட்சைக் கட்டணம் எச்சூழ்நிலைகளின் கீழும் மீளளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சையானது 2016, சனவரி மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சை பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(v) விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- பிரவேச அட்டையின்றி பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சார்த்தியின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்பட்டுள்ள பிரவேச அட்டை மட்டுமே பரீட்சை நடைபெறும் நாளன்று பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்குக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

பரீட்சார்த்தியொருவருக்குப் பிரவேச அட்டையொன்றை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்னும் நிகழ்வை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படுதலாகாது.

(vi) விண்ணப்பமானது, 23 செ. மீ. x 25 செ. மீ. என்னும் அளவிலான ஏ4 தாள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். தாளின் இரு பக்கங்களும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். 1 முதல் 7 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்தில் காட்டப்பட வேண்டும். 8 முதல் 11 (அ) வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்தில் காட்டப்படுதல் வேண்டும். மற்றும் 11(ஆ) முதல் 12 வரையிலான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்தில் காட்டப்படுதல் வேண்டும். இயைபான விபரங்கள் பரீட்சார்த்தியின் கையெழுத்திலே தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றைப் பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

நிரப்பப்பட்ட விண்ணப்பம் இப்பரீட்சை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை ஒத்திருக்கின்றதாவெனப் பரீட்சார்த்தி செவ்வை பார்த்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தை ஒத்திராத விண்ணப்பங்கள் அல்லது முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென இத்தால் மேலும் அறிவிக்கப்படுகின்றது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கிணங்கப் பரீட்சார்த்திகள் விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(vii) அரசாங்க சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர் கள் அவர்களின் முறையான திணைக்களத் தலைவர்களி னூடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(viii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. உரிய படிவத்தில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி பிரவேச அட்டைகளை அனுப்பி வைப்பார். பரீட்சார்த்திகளுக்குப் பிரவேச அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களம் அது தொடர்பான அறிவித்தலொன்றைச் செய்தித்தாள்களில் வெளியிடும். அத்தகைய வெளியீட்டிலிருந்து 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் பிரவேச அட்டையொன்று கிடைக்காதுவிடின், அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட முறையில் பரீட்சார்த்தியின் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்துடனும் பரீட்சையின் பெயருடனும் சேர்த்து அத்தகைய நிகழ்வு பற்றி பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியேயுள்ளவொரு பிரதேசத்திலிருப்பவராயின் பிரவேச அட்டையின் பிரதியொன்று அனுப்பப்படக்கூடிய தொலைநகல் இலக்கத்தைக் கொண்டிருக்க வேண்டிய கோரிக்கைக் கடிதத்துடன் சேர்த்து, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொலைநகல் இலக்கத்துடன் தொடர்புகொண்டு விசாரணைகளைச் செய்தல் சாதுரியமானதாகவிருக்கும். குறித்த சில தேவைப்பட்ட தகவல்களை எண்பிக்கும்படி பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படின் அவ்வாறு செய்வதற்கென உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதற்கு எண்பிப்பான பற்றுச்சீட்டின் பிரதியையும், பதிவஞ்சல் மூலம் விண்ணப்பத்தை அனுப்பும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் உம்மிடம் வைத்திருத்தல் பயனுள்ளதாகவிருக்கும்.

(ix) பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது பரீட்சையைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

(x) பரீட்சையை நடாத்துவதற்காகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தோராகவுள்ளனர். அத்தகைய விதிகள் மீறப்படின் பரீட்சார்த்தி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட தண்டனையொன்றுக்கு அமைந்தவராக விருப்பார்.

(xi) ***விண்ணப்பதாரரின் ஆளடையாளம்***.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் எண்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

(xii) முக்கிய குறிப்பு :-

(அ) எந்த ஆவணமோ அல்லது அதன் பிரதியோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதலாகாது.
(ஆ) கோரப்படும்போது இயைபான ஆவணங்களின் மூலப்பிரதிகளைக் காண்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கவனிக்கப்பட மாட்டாது.

அரசாங்க சேவையில் அல்லது மாகாணப் அரசாங்க சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் தற்போது தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் அவர்களின் முறையான திணைக்களங்களின்/ நிறுவனங்களின் தலைவர்களினூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பிரவேச அட்டையி லுள்ள அவரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவிப்பது வலுக்கட்டாய மானது. ஒரு நிறுவனத்தினூடாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியொருவர் இயைபான நிறுவனத்தின் தலைவரினால் அவரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்து வித்தல் வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகள் தமது கையொப்பங்களை ஓர் அரசாங்கப் பாடசாலையின் அதிபர்/ ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, ஆயுதந்தாங்கிய படைகளின் ஆணைபெற்ற அலுவலர், பகிரங்க சேவையில் அல்லது மாகாண பகிரங்க சேவையில் நிரந்தரமான பதவி வகிக்கின்றவரும் ஆண்டொன்றுக்கு 2,40,360 ரூபாவான அல்லது அதற்கு மேற்பட்டதான திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்றவருமான பதவிநிலை அலுவலர், ஒரு பௌத்த கோயிலின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு அல்லது மதகுருவாக குறிப்பிடத் தக்க பதவியை வகிக்கின்றவரும் வேறேதேனும் மதத்துக்குரிய மத ஸ்தலத்துக்குப் பொறுப்பாகவிருக்கின்றவருமான ஆளொருவர் என்போர் மூலம் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும்.

(xiii) ***பொய்யான தகவலை வழங்கியமைக்கான தண்டனை.-*** பரீட்சார்த்திக்குத் தேவைப்பட்ட தகைமைகள் இல்லையென தெரியவரின், அவரது பரீட்சார்த்த உரிமையானது பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்நேரத்திலேனும் இரத்துச் செய்யப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டும்.

பரீட்சார்த்தியொருவர், அவர் பொய்யானதென அறிந்திருந்த ஏதேனும் விடயத்தைச் சமர்ப்பித்துள்ளமை அல்லது அவர் வேண்டுமென்று முக்கியமான விடயங்களை மறைத் திருந்தமை வெளியாகினால், அவர் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

(xiv) ஒவ்வொரு பாடத்துக்கும் குறித்தளிக்கப்பட்ட புள்ளிகளில் 40 சதவீதத்துக்கு மேற்பட பெற்றுள்ள பரீட்சார்த்திகள், பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டதன் மேல் கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு அமைந்தோ ராவர். எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையிலும் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கு வரிசையின்படி தயாரிக்கப் பட்ட பெறுபேறுகள் நிரல், பகிரங்க சேவை ஆணைக்குழு வுக்குச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு அவர்களின் பெறுபேறுகளை நேரடியாக அறிவிப்பார் அல்லது அத்தகைய பெறுபேறுகளை அவர் இணையத்தளத்தில் www.result.exams.gov.lk என்பதில் வெளியிடலாம்.

8. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைசார் விதிகளும், அரசாங்க சேவை தொடர்பாகக் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் நிறைவேற்றுச் சேவை தரம் III தொடர்பான சேவைக் குறிப்புக்களும் அத்துடன் அத்தகைய சேவைக் குறிப்புக்களுக்கான திருத்தங்களில் அடங்கியுள்ள நிபந்தனைகளும் இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

9. இவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் கருமம் பற்றி பகிரங்க சேவை ஆணைக்குழு முடிவுசெய்யும்.

10. வெற்றிடங்களை நிரப்புவதற்கான அல்லது நிரப்பாது விடுவதற்கான அல்லது வெற்றிடங்களின் பகுதியை நிரப்புவதற்கான இறுதி முடிபு அரசாங்க சேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாதல் வேண்டும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையேக மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்.

நீதி அமைச்சு,
அதிகரண மாவத்தை,
கொழும்பு 12,
2015, செத்தெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவி சட்டவரைஞர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2013 (2015)**

1. பரீட்சார்த்தி எந்த மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உட்கருதுகின்றார் ? :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் உட்புகுத்தவும்)

2. பெயர் :

(அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :
திரு./திருமதி/செல்வி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

சிங்களத்தில்/தமிழில் :----.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துரைக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

சிங்களத்தில்/தமிழில் :----.

3. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :-

ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.
சிங்களத்தில்/தமிழில் :----.

4. நிரந்தர முகவரி :----.

நிரந்தர முகவரி அமைந்துள்ள மாவட்டம் :----.

5. பால் :
ஆண் - 0
பெண் - 1
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் உட்புகுத்தவும்)

6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

7. நீர் இலங்கைப் பிரசையா :
ஆம் - 1
இல்லை - 2
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் உட்புகுத்தவும்)

8. பிறந்த திகதி :-

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----.

9. (i) உயர் தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் :----.
(ii) இரண்டாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்ச தகைமை :----.
(iii) முதலாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்சத் தகைமை :----.

க. பொ. த. சாதாரண தரத்தின் அல்லது க. பொ. த. உயர் தரத்தின் விடயத்தில் பரீட்சையாண்டும் பெறப்பட்ட தரங்களும் (உ-ம் : திறமைச் சித்தி, விசேட சித்தி) குறிப்பிடப்படுதல் வேண்டும்.).

(iv) (அ) பட்டத் தகைமைகள் :

| பட்டம் | பாடங்கள் | சித்தி (வகுப்பு) | ஆண்டு | பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ) பட்டப்பின் பட்ட தகைமைகள் :

| பட்டப்பின் பட்டத்தின் பெயர் | பட்டப்பின் பட்டம் வழங்கப் பட்ட ஆண்டு | பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|
| | | |

(v) சட்டத்தரணியாகப் பெற்ற அனுபவம் (சேவைச் சான்றிதழொன்றை இணைக்கவும்) :----.

10. (i) ஏதேனும் தவறுக்காக நீர் சட்ட நீதிமன்றமொன்றில் எப்போதேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ?

ஆம்/இல்லை

ஆம் எனில், விபரங்களைத் தரவும் :----.

(ii) பரீட்சைக் கட்டணங்கள் :----.
பற்றுச்சீட்டு இல. :----.
கொடுப்பனவுத் திகதி :----.
கொடுப்பனவு எந்த அலுவலகத்தில் செய்யப்பட்டது ? :----.

| கழராதவகையில் பற்றுச்சீட்டை இங்கு உறுதியாக ஒட்டவும். |
|---|

11. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் நியமனத்துக்கு முன்னர் பொய்யானதென அல்லது பிழையானதெனக் காணப்படின் நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும், நியமனத்துக்குப் பின்னர் பொய்யானதென அல்லது பிழையானதெனக் காணப்படின், இயைபான நடவடிக்கை முறைகளுக்கமைய நட்டஈடின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் என்றும் அறிந்துள்ளேன். பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கு நான் அமைந்தவராகவுள்ளேன் என்றும் இயைபான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் பெறப்பட்ட பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் மேலும் கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12. (i) விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் :
இவ்விண்ணப்பத்தை அனுப்புகின்ற திரு./திருமதி/செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் 2015 ஆம் ஆண்டு .......... மாதம் ............ ஆந் திகதியன்று இட்டார் என்றும் நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

(ii) திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

விண்ணப்பதாரரினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை நான் பரிசோதனை செய்துள்ளேன் என்றும், சொல்லப்பட்ட விபரங்கள் சரியானவையெனக் காணப்படுகின்றன என்றும், நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துவதுடன் அவரது செயல் நிறைவேற்றுகை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானவை என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். கட்டமைவு ரீதியிலான நேர்முகப் பரீட்சையில் அவர் மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படின், அவரை இத்திணைக்களத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப்பெயர் :----.
திகதி :----.

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2015 |
| | | வெள்ளி | 09.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2015 |
| | | வெள்ளி | 16.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2015 |
| | | வெள்ளி | 23.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2015 |
| | | வெள்ளி | 30.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2015 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2015 |
| | | வெள்ளி | 13.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2015 |
| | | வெள்ளி | 20.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2015 |
| | | வெள்ளி | 27.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2015 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 04.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.11.2015 |
| | | வெள்ளி | 11.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.11.2015 |
| | | வெள்ளி | 18.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.12.2015 |
| | | புதன் | 23.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.12.2015 |

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.